## பகடிவதையில் ஈடுபட்ட பயிற்சியாளர்
# நீக்கம் செய்யப்படலாம்
### தற்காப்புத்துறை அமைச்சர் தகவல்




கோலாலம்பூர், நவ. 13-

மலேசிய தேசிய தற்காப்புப் பல்கலைக்கழகத்தில் பயிற்சியாளர் ஒருவருக்குப் பகடிவதை கொடுத்த 4ஆம் ஆண்டு பயிற்சியாளர் அப்பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்படலாம் என தற்காப்பு அமைச்சர் டத்தோஸ்ரீ முகமட் காலிட் நோர்டின் கூறினார்.

இரண்டாம் ஆண்டு மாணவரை இஸ்திரிப்பெட்டியால் சூடு வைத்த குற்றச்சாட்டை எதிர்நோக்கிய இவர் மீது தற்காப்புத்துறை விசாரணை செய்து வருகிறது. விசாரணைக்குப் பின்னர் இவ்விவகாரம் குறித்து முடிவு செய்யப்படும் என அவர் தெரிவித்தார்.

இது குறித்து விசாரணை வாரியம் முழுமையாக விசாரணை செய்து வருவதாகக் கூறிய அவர், போலீஸ் விசாரணையைப் போலவே இந்த விசாரணையும் அமைந்திருக்கும் என நம்புவதாகத் தெரிவித்தார்.

அவருக்கான தண்டனையை தமது அமைச்சு பின்னர் அறிவிக்கும். தேசிய தற்காப்புப் பல்கலைக்கழகத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு வரும் பயிற்சியாளர்களின் பாதுகாப்பு விவகாரத்தில் தாம் ஒருபோதும் விட்டுக்கொடுக்கும் போக்கைக் கடைப்பிடிக்கப் போவதில்லை எனவும் அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்ட அந்தப் பயிற்சியாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் உறுதி கூறினார். இதுபோன்ற பகடிவதைச் சம்பவங்களில் ஈடுபடும் பயிற்சியாளருக்கு எதிராக தமது அமைச்சு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

ஒருவேளை அவர் பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கப்படலாம். அதேவேளையில் அவருக்கு வழங்கப்பட்டு வந்த உபகாரச் சம்பளத்தை அவர் தமது அமைச்சுக்குத் திருப்பி ஒப்படைக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நேற்று தற்காப்புத்துறை அமைச்சில் நடைபெற்ற 2024ஆம் ஆண்டுக்கான உயர்நெறி தினக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மலேசிய ஊழல் தடுப்பு ஆணையத்தின் தலைமை ஆணையர் டான்ஸ்ரீ அஸாம் பாக்கி, தற்காப்பு அமைச்சின் தலைமைச் செயலாளர் டத்தோஸ்ரீ ஹிஷாம் இஷாக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதுபோன்ற பகடிவதைச் சம்பவங்களில் ஈடுபடும் பயிற்சியாளர் அப்பல்கலைக்கழகத்தில் இருந்து நீக்கம் செய்யப்படும்போது அவருக்கு வழக்கப்பட்டு வந்த உபகாரச் சம்பளத்தை அவர் அமைச்சுக்குத் திரும்ப வழங்க வேண்டும் என அவர் கூறினார்.

இதிலிருந்து பகடிவதை போன்ற ஆரோக்கியமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக தமது அமைச்சு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்ற அவர், இவ்விவகாரத்தில் இருந்து யாரும் தப்ப முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

இரண்டாம் ஆண்டு பயிற்சியாளருக்கு இஸ்திரிப்பெட்டியில் சூடு வைத்ததாக இம்மாதம் 8ஆம் தேதி அப்பல்கலைக்கழகத்தின் 4ஆம் ஆண்டு பயிற்சியாளர் மீது இங்குள்ள செஷன்ஸ் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனினும் நீதிபதி எகுஸ்ரா அலி முன்னிலையில் வாசிக்கப்பட்ட அவருக்கு எதிரான குற்றச்சாட்டை அமிருல் இஸ்கண்டார் அமாட் நோர்ஹனிஸான் (வயது 22) மறுத்து விசாரணை கோரினார்.

அன்றிரவு நள்ளிரவு 11.45 மணி அளவில் சுங்கை பீசியில் உள்ள அப்பல்கலைக்கழகத்தின் பயிற்சி முகாமில் முகமட் சல்மான் முகமட் சைஃபுல் (வயது 20) என்பவரை இஸ்திரிப்பெட்டியால் சூடு வைத்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

குற்றவியல் சட்டத்தின் 324ஆவது பிரிவின் கீழ் குற்றச்சாட்டை எதிர்நோக்கியுள்ள அவர் குற்றவாளி என நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 10 ஆண்டு சிறை அல்லது பிரம்படி விதிக்க சட்டத்தில் இடம் உண்டு.

## நியாயமான விலையில் உணவு விற்பனை செய்யும்
# உணவகங்களைத் தேர்ந்தெடுப்பீர்
### வாடிக்கையாளர்களுக்கு பரிந்துரை



ஜோகூர் பாரு, நவ.13-

நியாயமாகவும் ஏற்ற விலையிலும் உணவு விற்கப்படும் உணவகங்களை தேர்வு செய்வதோடு வாடிக்கையாளர்கள் புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும் என்று ஜோகூர் பயனீட்டாளர் சங்கத் தலைவர் முகமட் சாலே சடிஜா ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்நாட்டில் இதற்கு முன் வாடிக்கையாளர்கள் முன்னெடுத்த புறக்கணிப்பு நடவடிக்கை மாபெரும் வெற்றியடைந்த நிலையில் தற்போது வேண்டும் என்றே உணவு விலைகளை உயர்த்தும் நிறுவனங்கள் மீதும் அந்த புறக்கணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றார் அவர்.

அண்மைக் காலமாக பொருட்களின் விலை உயர்வு கண்டு வருவதை மறுக்காத அவர், ஏறத்தாழ ஒவ்வோர் ஆண்டும் உணவு விலையை உயர்த்துவதற்கு அதனை ஒரு காரணமாக கூறக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டார்.

மாமாக் கடைகள் உட்பட உணவக உரிமையாளர்கள் இதற்கு முன் அதாவது இவ்வாண்டு தொடக்கத்தில் சமையல் பொருட்கள் விலை உயர்வு காரணமாக உணவு விலையையும் உயர்த்தியதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதத்தில் 1,700 ரிங்கிட் குறைந்த பட்ச சம்பளத்தின் காரணமாக மேலும் உணவு விலையை உயர்த்தப்போவதாக செய்தி வெளி வந்திருந்தன.

ஆனாலும் அது ஏற்புடையதல்ல. காரணம் அண்மையில்தான் அவர்கள் உணவு விலையை உயர்த்தியிருந்தனர். அதோடு மீண்டும் விலையை ஏற்றினால் அது வாடிக்கையாளர்ளை மேலும் பாதிக்கும். வாடிக்கையாளர்கள் தங்களின் உரிமையையும் அதிகாரத்தையும பயன்படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பாக இன்னமும் நியாயமான விலை உணவு விற்பனை செய்யும் உணவகங்களை அவர்கள் தேர்ந்தெடுப்பதோடு அதிக விலையில் விற்பனை செய்யும் உணவகங்களை புறக்கணிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்நிலையில் ஜோகூர் பாரு மாநகரத்திலும் வாழ்க்கைச் செலவினங்கள் உயர்ந்த நிலையில் உள்ளது. இங்குள்ள மக்கள் சிங்கப்பூர் பிரஜைகள், அந்நாட்டில் வேலை செய்யும் மலேசியர்களுடன் போட்டியிட வேண்டியுள்ளது என்றும் முகமட் சாலே சுட்டிக் காட்டினார்.

## 475 கிலோ அரிசி கடத்தல்
# இளைஞன் கைது



கோத்தா பாரு, நவ.13-

தாய்லாந்திலிருந்து 475 கிலோ எடையிலான அரிசியை கடத்தி வந்ததாக சந்தேகிக்கப்படும் 15 வயது இளைஞனை போலீசார் கைது செய்துள்ளனர். அவன் ஓட்டி வந்த புரோட்டோன் பெர்சோனா காரில் அந்த அரிசி இருந்தது உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து அவனை காலை 8 மணியளவில் பாசிர் மாஸ், கம்போங் டங்கார் மும்முனை சந்திப்பில் கைது செய்ததாக தென் கிழக்கு பொது பாதுகாப்புப் படையின் (பிஜிஏ) கமாண்டர் டத்தோ நிக் ரோஸ் தெரிவித்தார்.

அந்த இளைஞன் 1,900 ரிங்கிட் மதிப்புள்ள அரிசியை முறையான ஆவணம் இன்றி கொண்டு வரும் வேலை செய்து வந்ததாக நம்பப்படுகிறது. இதனை அடுத்து 1994 தேசிய நெல் , அரிசி மேலாண்மை சட்டம் பிரிவு 220இன் கீழ் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

# 2025 சிலாங்கூருக்கு வருகைபுரியும் ஆண்டு:
## ஜிஎம் கிளாங் நிறுவனத்தின்
# சிறப்புப் பிரச்சாரம்

GM KLANG

ராமேஸ்வரி ராஜா



கிள்ளான், நவ. 13-

2025ஆம் ஆண்டு சிலாங்கூர் மாநிலத்திற்கு வருகை புரியும் ஆண்டாக இருக்கும் வேளையில் மொத்த விற்பனை மையமான ஜிஎம் கிளாங் நிறுவனம் பல்வேறு சிறப்புப் பிரச்சாரங்களுக்கு ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாண்டு இறுதி தொடங்கி அடுத்தாண்டு தொடக்கம் வரை இந்தப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளைக் கவரும் வகையில் இந்தப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப் படவுள்ளன.

இப்பிரச்சாரத்தை சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினரும் வீடமைப்பு ஊராட்சி, சுற்றுலாக் குழுவின் தலைவருமான இங் சுயி லிம் அதிகாரப் பூர்வமாகத் தொடக்கி வைத்தார்.

ஜிஎம் கிளாங் நிறுவனத்தின் கீழ்த்தளத்தில் உள்ள மண்டபத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது. நாம் பொருட்களை மொத்தமாக வாங்குவதற்கு எங்கே செல்வோம் என சமூக வலைத்தளங்களில் படங்களை அனுப்பும் பிரச்சாரமும் இதில் அடங்கும்.




சிலாங்கூர் மாநிலத்திலுள்ள பல பகுதிகளுக்குச் சுற்றுலா செல்லும் அம்மாநில மக்கள் ஜிஎம் கிளாங் நிறுவனத்திற்கு வருகை புரிவதை ஊக்குவிக்கும் வகையில் இந்தச் சிறப்புப் பிரச்சாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சாரத்தில் கலந்து கொள்பவர்கள் ஜிஎம் கிளாங் உட்பட இதர இடங்களுக்குச் சுற்றுலா சென்றதற்கான இரண்டு படங்களை இதில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அதேவேளையில் கிள்ளான் நகரில் உள்ள ஜிஎம் கிளாங் நிறுவனத்திற்கு வருகை தந்து 200 ரிங்கிட்டைச் செலவிடும் பொதுமக்கள் கவர்ச்சிகரமான பரிசுகளைத் தட்டிச் செல்லலாம்.

அதிர்ஷ்டமுள்ள மலேசியர்களுக்கு அடுத்தாண்டு முதல் மாதம் ஒன்றுக்கு 500 ரிங்கிட் வரை ஜிஎம் கிளாங் நிறுவனத்தில் பொருட்களை வாங்க சலுகைகள் வழங்கப்படும் என அந்நிறுவனத்தின் தொடர்புத்துறை அதிகாரி நொர்சுஹைடா ஒஸ்மான் கூறினார்.

இப்பிரச்சாரத்திற்கு கிள்ளான் மாநகர மன்றமும் சிலாங்கூர் சுற்றுலா அமைப்பும் ஆதரவு கொடுக்கும் என அவர் தெரிவித்தார். இதன்வழி அடுத்தாண்டு ஜிஎம் கிளாங் நிறுவனத்திற்கு வரும் பொதுமக்களின் எண்ணிக்கை 2 மடங்கு அதிகரிக்கும் என்பதோடு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுப்பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டை சிலாங்கூர் மாநிலத்திற்கு வருகை புரியும் ஆண்டாக ஊக்குவிக்கும் வகையில் இன்னும் அதிகமான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அதோடு இவ்வாண்டு ஜிஎம் கிளாங் நிறுவனத்தின் 15ஆவது நிறைவு ஆண்டு கொண்டாடப் படவிருப்பதால் இந்நிறுவனத்திற்கு வருகை புரியும் அனைத்துலக சுற்றுப்பயணிகளுக்கு ஆங்கில மொழியில் ஒரு பாடலை அறிமுகப்படுத்தவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.



இது இவ்வாண்டு நவம்பர் மாதம் தொடங்கி டிக் டாக் வழி மேலும் விரிவாக அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார். இதன்மூலம் சிலாங்கூர் மாநிலத்திற்கு மேலும் அதிகமான சுற்றுப்பயணிகளை வரவழைக்க முடியும் என்பதோடு கிள்ளான் மாநகர மன்றத்தின் சுற்றுலா தூதராகச் செயல் பட்டுக் கொண்டிருக்கும் ஜிஎம் கிளாங் நிறுவனத்தின் பங்களிப்பு மேலும் வலுவூட்டப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜிஎம் கிளாங் நிறுவனம் மலேசிய சுற்றுலா நிறுவனத்தின் ஆண்டு இறுதி விற்பனைப் பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் ஜிஎம் கிளாங் நிறுவனத்தின் மொத்த விற்பனையாளர்கள் வரும் டிசம்பர் 20ஆம் தேதி முதல் அடுத்தாண்டு ஜனவரி 5ஆம் தேதி வரை தங்களின் மாபெரும் விற்பனையை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

